UNIVERSITY OF JAFFNA
LIBRARY
02 OCT 2013
PERIODICALS DIVISION

2013 ஜீன்
அணி 09 படை 04
நன்கொடை ரூபா 20.00

# செஞ்சக்தி

மக்கள் விடுதலை முன்னயிணின் உத்தியோகபூர்வ செய்தித்தாள் | செய்தி பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டது


உள்ளே

அரசியல் அபிலாசைகளும் யதார்த்தங்களும்



பக்கம் 03

மக்கள் மீது சுமத்தப்படும் அரசாங்கத்தின் பாவச்சுமை



பக்கம் 05

குறிவைக்கப்படும் தோட்டப்புற காணிகள்



பக்கம் 06

## அநீதியான முறையில் அதிகரிக்கப்பட்ட மின்கட்டண உயர்வுக்கு எதிராக மக்கள் விடுதலை முன்னணியிண் கண்டன எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்



அரசாங்கம் அநீதியான முறையில் உயர்த்தப்பட்ட மின்கட்டண அதிகரிப்பை உடனே குறைக்கும்படி அரசாங்கத்தை வலியுறுத்தும் பேரணி மற்றும் கண்டன ஆர்ப்பாட்டம் மே 23ம் திகதி மக்கள் விடுதலை முன்னணியால் தலைநகர் கொழும்பில் நடாத்தப்பட்டது. சின்ன பொரளைச் சந்தியிலிருந்து ஆரம்பிக்கப்பட்ட ஆர்ப்பட்ட பேரணி மருதானை தொழில்நுட்ப சந்தியினூடாக கோட்டை புகையிரத நிலைய சுற்றுவட்டத்தை வந்தடைந்தடையும் ஆர்ப்பாட்ட பேரணியையே படத்தில் காண்கிறீர்கள்

# உக்கிரமடையும் பொருளாதார நெருக்கடி!

# நிவாரண பறிப்பில் அரசாங்கம்!

**நாளுக்கு நாள் உக்கிரமடைந்து வரும் இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு முகம்கொடுக்க முடியாத ராஜபக்ஷ அரசாங்கம் மக்களை வதைத்து, நிவாரணங்களை பறிக்கும் நடவடிக்கைகளை முன்னெத்து வருகிறது.**

உலக முதலாளித்துவத்தின் பின்னடைவின் காரணமாக அதை எதிர்கொள்ள முடியா திருக்கும் நாடுகளுக்கு சர்வதேச நாணய நிதியம் Austerity Programme 'சிக்கனத் திட்டம்' எனும் திட்டத்தை முன்மொழிந்திருக்கிறது. இது நிவாரணங்களை பறிப்பதை இலக்காக கொண்டத்திட்டமாகும். இலங்கையிலும் மகிந்தரும் அதையே பின்பற்றி வருகிறார். இலங்கை பொருளாதாரம் கடன் மீதும் வரி-மீதுமே தங்கியிருக்கிறது. 2012 ஆம் இறுத-ியல் இலங்கையின் செலுத்தப்படாத அரச கடன் 06 கோடி இலட்சத்தை கடந்துள்ளது. இவ்வாறன நிலைமையில் அரச செலவுகளை வகைப்படுத்தும்போது முதன்மை நிலை அடைந்திருப்பது கடன் செலுத்துதல் என்பது தெரியவருகிறது. 1990 தசாப்தங்களில் அரச செலவுகளை வரிசைப்படுத்தினால், 01. பொருட்கள், சேவைகள் மற்றும் நலன்புரி 02. ஊழியர்களின் சம்பளம், 03 கடன் மற்றும் வட்டி செலுத்துதலாகும். ஆனால் இப்போது முதலாமிடத்தில் இருந்த பொருட்கள், சேவைகள் மற்றும் நலனோம்பல் மூன்றாமிடத்திற்கு தள்ளப்பட்டு கடன் வட்டி செலுத்துதல் என்பன முதலாமிடத்திற்கு வந்துள்ளது.

அரச செலவுகளையும் கடன், வட்டி செலுத்துவதையும் அரசாங்கத்தால் தவிர்க்க முடியாது. அதற்கிணங்க பறிக்கப்பட போவது பொருட்கள் சேவைகள் மற்றும் நலன்புரி விடயங்களாகும். அதன்படி எதிர்வரும் நாட்களில் கல்வி, சுகாதாரச் சேவை-களை குறைப்பதற்கும், நிவாரணங்களை பறிப்பதற்கும், பொருட்கள் மீதான வரியை மேலும் அதிகரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. இப்போது சமூர்த்தி கொடுப்பனவுகளை பறிப்பதற்கும், விவசாய, மீனவர் ஓய்வூதியத்தை ஒழிப்பதற்குமான, நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அத்தோடு உரமானியத்திற்கும் வேட்டு வைக்கப்படவுள்ளது. அதாவது உரம் இறக்குமதி செய்யும் கம்பனிகளுக்கு பணம் செலுத்தப்படாத நிலையில் உர மானியம் முடிவுக்கு வருவதற்கான அறி-குறி தென்படுகிறது. அதேவேளை பெரும் நட்டத்தை ஏற்படுத்தியுள்ள மின்சார சபை, எரிபொருள் கூட்டுதாபனம் போன்றவற்றின் நட்ட சுமையை மக்கள் மீதே ஏற்றப்பட போகிறது. அதன்டிபடையில் மக்கள் மீது ஏற்றப்படும் வாழ்க்கை சுமை மற்றும் அழுத்தங்களை தவிர்க்க முடியாத காரணத்தினால் அரச எதிர்ப்பு மக்கள் போராட்டங்கள் துரிதமாக வளர்ச்சிபபெறுவது தவிர்க்க முடியாதென அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

நீதியான தேசம்!! நியாயமான சமுதாயம்!! அடிமையில்லா மனிதன்!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் ஜனநாயகம்!



மக்கள் விடுதலை முன்னணியின் ஏற்பாட்டில் இலங்கையின் ஜனநாயகம் எனும் தலைப்பிலான சொற்பொழிவு இலண்டன் மற்றும் பாரிஸ் நகரில் இடம்பெற்றது. லண்டன் நகரத்தில் கடந்த 19ஆம் திகதி தோழர் விஜித ஹேரத்தின் தலைமையில் இடமபெற்றதுடன் ஜூன் 02ம் திகதி பாரிஸ் நகரத்தில் தோழர் சுனில் ஹந்துனெத்தியின் தலைமையில் இடம்பெறவுள்ளது. லண்டன் சொற்பொழிவை லண்டன் கிளையும், பாரிஸ் சொற்பொழிவை பாரிஸ் கிளையும் ஏற்பாடு செய்திருந்தன.

சர்வாதிகாரத்தை நோக்கி நகரும் ராஜபக்ஷ ஆட்சியில் இலங்கைவாழ் மாணவர்கள், தொழிலாளர்கள், விவசாயிகள் உள்ளிட்ட அனைவரும் பாரிய பாதிப்பினையும், சிறுபான்மை இனத்தவர்கள் மீது அவர்களது ஜனநாயக உரிமைகளை பறித்து வருவதையும் அதன் மூலமாக நாடு பாரிய சவால்களை எதிர்கொண்டுள்ளதினை இச் சொற்பொழிவில் சுட்டடிக்காட்டப்பது. படத்தில் இலண்டனில் நடைபெற்ற கலந்துரையாடலில் தோழர் விஜித ஹேரத் உரையாற்றுவதையும் கலந்து கொண்ட மக்களில் ஒரு பகுதியினரையும் காண லாம்.

# ஏமாற்று வேண்டாம் ஜே.வி.பி.யின் பேரணி



அரசாங்கம் அநீதியான முறையில் மின்சார கட்டணத்தை அதிகரித்மைக்கு எதிராக போராட்டத்தில் குதித்த அரசியல் கட்சிகளில் முன்னணி வகிப்பது மக்கள் விடுதலை முன்னணியாகும். ஐ.தே.க ஊடக அறிக்கை விளையாட்டில் மட்டும் ஈடுபட்டதே தவிர ஆக்கப்பூர்வமாக நடவடிக்கைகள் எதையும் எடுக்கவில்லை. ஆனால் ஜே.வி.பி மக்களோடு கரங்கோர்த்துக்கொண்டு மின் கட்டண அதிகரிப்பிற்கு எதிராக கிராமங்கள், நகரங்கள் தோறும் பந்தங்கள் ஏந்தியப் போராட்டம், மகஜர் கையொப்பமிடல், உள்ளிட்ட பல்வேறு போராட்டங்களை முன்னெடுத்தது. அந்த ஆர்பாட்டத்தை கண்ட அரசாங்கம் கதிகலங்கிப் போயிருந்தது. அதன் காரணமாக மகிந்த மே முதலாம் திகதி மே தினக் கூட்டத்தில் 60 அலகுகளுக்கான மின் கட்டணம் அதிகரிப்பதில்லையென கூறினார். மக்களை ஏமாற்றுவதற்கான அறிக்கைகளை விடுவதற்கான பிரதான காரணம் ஜே.வி.பி யின் எதிர்ப்பு போராட்டமாகும். எவ்வாறாயினும் ஜனாதிபதியின் இந்த அறிக்கைக்குப் பின்னர் "ஏமாற்றும் வேண்டாம்! அதிகரிக்கப்பட்ட மின்சார கட்டணத்தை உடனடியாக குறை" எனும் தலைப்பிலான சுவரொட்டி இயக்கத்தை ஆரம்பித்தது. அத்தோடு மின் கட்டண அதிகரிப்பிற்கு எதிரான போராட்டத்தை தீவிரப்படுத்தியது.

மின்சார கட்டணத்தை குறைக்கும்படி கேட்டு அரசாங்கத்தை வற்புறுத்தும் ஆர்பாட்டப் பேரணியின் அடுத்த கட்டமாக கடந்த 23ஆம் திகதி கொழும்பு புஞ்சி பொரலையிலிருந்து புறக்கோட்டை ரயில் நிலையத்தை நோக்கி பாரிய ஆர்பாட்டப் பேரணியை நடத்தியது. இதில் பெரும்திரளான மக்கள் கலந்துக் கொண்டனர். அத்தோடு பொது மக்களின் பெரு வரவேற்பும் கிடைத்தது.

# மாகாண சபைகள் தேசியப் பிரச்சினைக்கு தீர்வல்ல

- மக்கள் விடுதலை முன்னணி-



மாகாண சபைகள் ஒருபோதும் தேசியப் பிரச்சினைக்கு தீர்வாக அமையாதென்றும் அது அதிகாரத்தை நீளுவதற்கும் மக்களை ஒடுக்குவதற்குமாக இன்னுமொரு அதிகார மையமாக அமைவதைத் தவிர வேறு புதினங்கள் ஒன்றும் இடம்பெறப் போவிதில்லையென மக்கள் விடுதலை முன்னணி வலியுறுத்துகிறது.

மக்கள் விடுதலை முன்னணியின் அரசியல் குழு உறுப்பினர் தோழர் அனுர திசாநபயக்க அரசாங்கம் வட மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்கு தயாராகிவருவது பற்றி மக்கள் விடுதலை முன்னணியின் நிலைபாட்டைத் தெரிவிப்பதற்கான செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இதைத் தெரிவித்தார்.

தொடர்ந்தும் கருத்து தெரிவித்த: அவர், அரசாங்கம் இராணுவத்தால் வடக்கில் கைதுசெய்யப்பட்ட இளைஞர் யுவதிகளை இன்னமும் தடுத்து வைத்திருக்கிறது. யுத்தம் முடிந்து நான்காண்டுகள் கடந்த நிலையில் அரசாங்கம் அவர்களை சமூகமயப்படுத்துவதில் தோல்விகண்டுள்ளது. அவர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்யாது, சட்டத்தை நடைமுறைப்படுத்தாது தடுத்து வைத்திருக்கிறது. எவ்வாறாயினும் அரசாங்கம் கே.பி.க்களை பாலூட்டி வளர்த்து வருகிறது. கே.பி அனுப்பிய ஆயுதங்களை ஏந்தி போராடிய இளைஞர் யுவதிகள் சிறைவாசம் அனுபவிக்கின்றனர். தயா மாஸ்டர் கையொப்பமிட்டு வெளியிட்ட அடையாள அட்டையை தன் கையில் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் 1995 ஆம் ஆண்டு கைதுசெய்யப்பட்ட இளைஞர் இன்னமும் சிறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளர் ஆனால் தயா மாஸ்டர் அமைதியாகவும் சுதந்திரமாகவும் வாழ்கிறார். வடக்கு தேர்தலிலும் போட்டியிடப் போவதாகவும் கூறுகிறார். அரசாங்கத்திற்கு நன்மைக் கிடைப்பது எவரிடமோ அவரையே அரசாங்கம் நன்கு பராமரித்து வருகிறது. கப்பல், பணம், தங்கம் யாரிடமிருக்கிறதோ அவர்களை மகிந்தர் ஆரத்தழுவுகிறார். கே. பிக்கள் தயா மாஸ்டர்களால் வழிநடத்தப்பட்டவர்கள் வருடக்கணக்கில் சிறையில் வாடுகின்றனர். சிறை வாழ்ககை மிகவும் கஷ்டமானதாகும். அவர்களுக்கு நிவாரணமளிக்கும் எந்தவொரு நடவடிக்கைகளையும் அரசாங்கம் மேற்கொள்ளவில்லை. அதேபோன்று விவசாயிகளுக்கு அவர்களுக்கு சொந்தமான காணியும், வேலைசெய்தவர்களுக்கு அவர்களது வேலையும் இல்லாது போயுள்ளது. மக்களை மீள்குடியேற்றம் செய்வதற்கு முன்னர் அவர்களது அடிப்படைத் தேவைகளை ஆராய்ந்திருக்க வேண்டும். அதாவது வருமானத்தை உறுதிப்படுத்தியிருக்க வேண்டும். ஆனால் அவைகளை செயய்வில்லை.

மகாணசபைகள் போன்றே தற்போதைய நிர்வாகக் கட்டமைப்பும் தேசியப் பிரச்சினைக்கு தீர்வாக அமையாது. மக்களுக்கு அவர்களது சுதந்திரத்தையும் ஜனநாயகத்தையும் பெற்றுக்கொடுத்தாக வேண்டும் அவர்களது சுதந்திர வாழ்க்கையைத் தொடர உட்கட்டுமான பணிகளை முன்னெடுத்தல் வேண்டும். அவர்களின் பிள்ளைகளின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் பொறுப்பை அவர்களிடமே ஒப்படைக்க வேண்டும். அவர்கள் முகம்கொடுக்கும் உண்மையான பிரச்சினைகளை இனங்கண்டு தீர்க்கப்படல் வேண்டும். இதுவே வடக்கிற்கான முக்கியமானதும் முதன்மையானதும் பணியாகும்.

## மத அடிப்படைவாதத்தை தோற்கடிக்க வேண்டும்

- தோழர் ரில்வின் சில்வா -




பௌத்த தர்மம் மனிதர்களை பாதுகாக்க வேண்டுமென்றே போதிக்கின்றது. எனவே அப்போதனையை கடைப்பிடிக்காது அரசியலுக்காக மத அடிப்படைவாதத்தை பரப்பி மனிதர்கள் அழிவதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச்செயலாளர் தோழர் ரில்வின் சில்வா தெரிவித்தார். பௌத்தம், இந்து, முஸ்லிம், கிருஸ்த்தவம் எந்த மத ரூபத்திலும் அடிப்படைவாதம் தலைதூக்கினாலும் அதனை எதிர்க்க வேண்டும். தமது அரசியல் இருப்புக்காகவும் ஆட்சியைப்பிடிப்பதற்காகவும் இலங்கையில் பௌத்த- சிங்கள மதவாதம் இன்று மட்டுமல்ல கடந்த பல தசாப்தங்களாகவும் இடம்பெற்றிருக்கின்றது. எனவே இன்று ஏற்பட்டுள்ள நிலைமை எதுவும் புதிய தொன்றல்ல. மக்கள் தத்தமது மதங்களை கடைப்பிடிப்பதற்கான சுதந்திரம் நாட்டில் உள்ளது. ஆனால் அரசியலுக்காக சில சக்திகள் மதவாதத்தை ஊக்குவிக்கின்றன.

மனிதர்களை மதித்து அவர்களை பாதுகாக்க வேண்டுமென்றே பௌத்தம் போதிக்கின்றதே தவிர மனிதர்களை அழிக்க வேண்டுமென போதிக்கவில்லை. எனவே மனித உயிரழிவு பௌத்தத்திற்கு எதிரானதாகும். நாட்டில் இன்று வடமத்திய மாகாணத்தில் சிறுநீரக நோயால் மக்கள் இறக்கின்றனர், விரக்தியால் உயிரை மாய்த்துக்கொள்கின்றனர். எனவே இம்மக்களை பாதுகாக்க அரசாங்கம் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். மனிதர்களை பாதுகாக்கும் போதனையை கடைப்பிடிக்க வேண்டுமே தவிர மத அடிப்படைவாதத்தை தலைதூக்கச்செய்து உயிர்களை அழிப்பது பௌத்தத்திற்கு விரோதமானதாகும் என்று அவர்மேலும் குறிப்பிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் அபிலாசைகளும் யதார்த்தமும்



முதலாளித்துவ அமைப்பின் நெருக்கடி நாளுக்கு நாள் உக்கிரமடைவதினால், மஹிந்தரின் அரசாங்கத்திற்கு அதற்க்கான தீர்வு இல்லாததன் காரணமாக, நெருக்கடியின் சுமைகளை மக்கள் மீது ஏற்றுவதால், ராஜபக்ஸ அரசாங்கம் படிப்படியாக செயலிழக்க ஆரம்பமாகியுள்ளது. அரசாங்கத்தின் வீழ்ச்சியை மேலும் கோடிட்டு காட்டும்விதமாக அரசியல் கட்சிகள் அதிகாரத்தை கைபற்றுவதற்கான நடவடிக்கைகளை துரிதப்படுத்தியுள்ளன தற்போது இலங்கை அரசியலில் காணக்கூடிய போக்குகள் அதுவாகும். சூரியனை மையமாகக்கொண்டு ஏனைய கோள்கள் சுழல்வதைப்போன்றே அரசியலில், அரசியல் கட்சிகள் மற்றும் குழுக்கள் அதிகார மையத்தைசூழவே சுழல்கின்றன. இலங்கை அரசியலை கருத்தில் கொள்ளும்போது அதிகாரத்திற்காக செயற்படும் அரசியலில் நான்குவிதமான போக்குகளை காணமுடிகிறது. அதில் முதலாவது ராஜபக்ஷ அரசாங்கமும் அதைச் சூழ அதிகாரத்திற்காக அணிதிரண்டிருக்கும் கும்பல்களுமாகும்.

அடுத்ததாக ஐக்கிய தேசிய கட்சியும் அதிகாரத்திற்காக அதைச்சூழ அணித்திரண்டிருக்கும் போலி இடதுகள் முதல் பிற்போக்கு NGO வடிவிலான கும்பல்களாகும்,

அடுத்தது ஜே.வி.பி பிரதிநிதித்துவம் செய்கின்ற இடதுசாரி இயக்கமாகும்.

அடுத்ததாக தமிழ் தேசிய கூட்டமைப்பும் பிரிவனைவாத கும்பலுமாகும். இடதுசாரி இயக்கத்தின் முன்னால்இருக்கும் பணியானது துரிதமாக முதலாளித்துவ முறைமையில் இன்னுமொரு அரசாங்கத்தை அமைப்பதற்கோ அல்லது முதலாளித்துவ அரசாங்கத்தை அமைக்க பங்களிப்பு செய்யும் அரசியல் அல்ல. அதற்கு மாறாக சமூக மாற்றத்திற்காக மேற்கொள்ளப்படும் அகநிலை காரணியின் வளர்ச்சிக்கேற்றவாறு புறநிலைக் காரணியை கட்டியெழுப்பி

**மாகாணசகளை எதிர்ப்பதாக கூறிக்கொண்டு தமது அதிகாரத்தை பெருக்கிக்கொள்வதற்காக தேர்தலை நடத்தியது. கிழக்கில்கூட தேர்தலை நடத்தியது. அதனிடையே வடமாகாணசபை தேர்தலை நடத்துவதற்காக இந்தியாவுக்கும், மேற்குலகுக்கும் உறுதியளித்தது. இப்போது உண்மையாகவே வடக்கில் தேர்தலை நடத்த நேரிடும்போது. தேர்தலை நடத்துவதற்கு இணங்கிய திகதி நெருங்கும்போது வடக்கு தேர்தலை நடத்துவதற்கு அஞ்சுகிறது. அதன் பிரதான காரணம் அதில் அரசாங்கம் வெல்ல முடியாது என்பதினாலாகும்**

இந்த சமூக முறைக்கெதிரான நீண்ட அரசியல் பயணமாகும். ஆனால் ஆட்சியிலிருக்கும் அரசாங்கத்திற்கும் அதை வீழ்த்திவிட்டு அதிகாரத்தை கைப்பற்ற ஆசை கொணடிருக்கும் ஐக்கிய தேசிய கட்சிக்கும் இடையில் இருப்பதோ வேறு நோக்கமாகும். அதில் ராஜபக்ஷ அரசாங்கத்தின் அபிலாசையாக பெற்றுக்கொண்ட அதிகாரத்தை கை விடாது மேலும் போதுமான காலம்வரை அதிகாரத்தை தக்கவைத்துக் கொள்கின்ற போக்காகும். ஐ.தே.க உள்ளிட்ட கும்பள்களின் தேவை தற்போதைய அரசாங்கத்தை எப்படியாவது விரட்டிவிட்டு தாம் அதிகாரத்தை கைப்பற்றுதேயாகும். இந்த இரண்டு கும்பள்களின் அபிலாசைகளின் அரசியல் யதார்த்தம் என்னவென்று புரிந்துக்கொண்டிருப்பது சமூக மாற்றத்திற்காக செயற்படுவோருக்கு மிக முக்கியதுவமிக்கதாக அமையும். அதற்கிடையே தமிழ் தேசிய கூட்டம்மைப்பின் தமது அரசியலை மையமாக கொண்டிருப்பது மாகாணசபை தேர்தலை நடத்தி அதன் அதிகாரத்தை கைப்பற்றுவதேயாகும்.

மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியானது கடந்த காலம் முழுவதிலும் தமது இருப்பை தக்கவைத்துக்கொண்டு அதிகாரத்தை பயன்படுத்தி தமது குடும்பத்திற்கு நற்பெயரும். மகிழ்ச்சி, உல்லாசம் மற்றும் சொத்துக்களை சேகரிப்பதற்கான நடைமுறைகளே. ராஜபக்ஷ ஆட்சி மக்களை வென்றெடுப்பதற்குப் பதில் அரசியலமைப்பு திருத்தம் தேர்தர்கள் மூலமாகவே தனது இருப்பை தக்கவைத்துக் கொள்வதற்காக முயற்சியில் ஈடுபடுகின்றனர், வடக்கில் யுத்தம் நிறைவடைந்ததுடன் அதன் பெறுபேறுகளை தமக்கு சாதகமாக்கிக்கொண்டு இடைக்கிடையே மாகாணசபை தேர்தல்களை வெற்றிக்கொண்ட ராஜபக்ஷாக்கள், அத்தோடு ஜனாதிபதி தேர்தலையும், பொதுத்தேர்தலையும் உரிய காலத்திற்கு முன்பே நடத்தி அவைகளை வெற்றிக்கொண்ட. அது யுத்தம் முடிவடைந்து அக்கிணி சுவாலை தணியுமுன்னர் தமக்கு சாதகமாக்கி கொண்டாகும். அடுத்தாக ஐ.தே.க, முஸ்லிம காங்கிரஸ் எம்.பி.க்களை விலைக்கு வாங்கிய அரசாங்கம் 3/2 பெரும்பான்மை பலத்தை அமைத்து 18வது அரசியில் திருத்த சட்டமூலத்தை நிறைவேற்றியதன் மூலம் ஜனாதிபதி பதவிக்கிருந்த இரண்டு முறை காலக்கெடுவை நீக்கிகொண்டனர். அதன் பின்னர் நீதித்துறையிலும் த்லையிட்டு அதையும் தமது கட்டுக்குள் கொண்டு வந்தனர். அதற்கினங்க நிறைவேற்றதிகாரம், சட்டவாக்கல் சபை மற்றும் நீதிமன்றம் ஆகிய அரச அதிகாரத்துடன் தொடர்புடைய மூன்று முக்கிய நிறுவனங்களும் அரசாங்கத்தின் கைகளில் சிக்கிக்கொண்டது.

அவ்வாறு இருந்த போதிலும் இப்போது அரசாங்கத்திற்கு அதிகாரம் தொடர்பான சந்தேகம் எழுந்துள்ளது. காரணம் அதிகாரத்தின் உண்மையான ஊற்றான மக்கள் நாளுக்கு நாள் அரசாங்கத்திடமிருந்த ஒதுங்கி வருவதால் அதிகாரம் பறிபோய்விடுமோ என்ற பயம் மகிந்தருக்கு பீடித்துள்ளது.

அரசாங்கம் வசமுள்ள பாராளுமன்றத்தின் 3/2 பலமும் இப்போது செயலற்ற நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. அது 13வது திருத்த சட்டமூலத்தில் சில அதிகாரங்களை நீக்குவதற்கு 3/2 அதிகாரத்தை பெற்றுக்கொள்ள முடியாமையினால் இது மேலும் தெளிவாகிறது. ராஜபக்ஷ அரசாங்கம் தூரநோக்கற்ற அரசாங்கமாகும். மாகாணசபைகளை எதிர்ப்பதாக கூறிக்கொண்டு தமது அதிகாரத்தை பெருக்கிக் கொள்வதற்காக தேர்தலை நடத்தியது. கிழக்கிலும் தேர்தலை நடத்தியது. அதேபோன்று வடமாகாணசபை தேர்தலை நடத்துவதாக இந்தியாவுக்கும், மேற்குலகுக்கும் உறுதியளித்தது. இப்போது உண்மையாகவே வடக்கில் தேர்தலை நடத்த நேரிடும்போது. தேர்தலை நடத்துவதற்கு இணங்கிய திகதி நெருங்கும்போது அரசு வடக்கு தேர்தலை நடத்துவதற்கு அஞ்சுகிறது. அதன் பிரதான காரணம் அதில் அரசாங்கம் வெல்ல முடியாது என்பதினாலாகும். அடுத்ததாக வட மாகாணசபை தமிழ் கூட்டமைப்பிடம் செல்லும்போது ஏற்படும் சிக்கல் நிலையும் காரணமாக அமைந்துள்ளது.

ஆனால் தற்போது அரசாங்கத்தால் அதை நடத்தாமல் இருக்கவும் முடியாது. 2013 நவம்பரில் அம்பாந்தோட்டையில் நடத்தவிருக்கும் பொதுநலவாய நாடுகளின் அரச தலைவர்கள் கூட்டத்தை நடத்துவதற்கு முன்னர் வடக்கு தேர்தலை நடத்தும் நிபந்தனைகளுடன். உதவியிருப்பது இந்தியாவாகும். அதற்கிணங்க பொதுநலவாய நாடுகளின் தலைவர் பதவிக்காக தமது ஆதரவு சக்திகளின் எதிர்ப்பை பொருட்படுத்தாது வடக்கு தேர்தலை நடத்தியாக வேண்டும். இல்லையெனில் இந்தியாவின் எதிர்ப்பை எதிர்கொண்டு மாகாணசபை தேர்தலை பிற்போட்டாக வேண்டும். இந்தப் பிரச்சினையில் அரசாங்கம் இரண்டுங் கெட்டான் நிலையை எதிர்கொண்டிருக்கிறது.

மறுபுறத்தில் நாடு எதிர்கொண்டிருக்கும் பாரிய பொருளாதார நெருக்கடியால் மக்கள் மீது சுமைகளை ஏற்றி நலன்புரி சேவைகள் அனைத்தையும் படிப்படியாக பறித்து வருகிறது. அதனால் அரசாங்கம் பாரிய மக்கள் எதிர்ப்புக்கு ஆளாகியுள்ளது. அத்தோடு அரசாங்கத்தில் தோன்றியுள்ள உட்கட்சிபூசல் காரணமாக நாட்டு மக்களின் பாரிய எதிர்ப்பினை எதிர்கொள்ள வேண்டிவரும்.

இந்த அனைத்து நெருக்கடிகளும் ராஜபக்ஸவின் அதிகாரத்திற்கு பெரும் சவாலாக அமைந்துவிடும் என்று அஞ்சுகின்றனர். அதனால் இன்னும் கொஞ்ச காலத்திற்கேனும் அதிகாரத்தை தக்க வைத்துக்கொள்வதே ராஜபக்ஷாக்களின் அபிலாசையாக இருக்கிறது. நிலைமை மேலும் மோசமடைந்து மக்கள் எதிர்ப்பு உக்கிரமடையும் முன்னர் ஜனாதிபதி தேர்தலை நடத்தி தமது இருப்பினை தக்கவைத்துக் கொள்வதற்கு ராஜபக்ஷாக்கள் சிந்திப்பதாக தெரிகிறது. ஆனால் அரசியல் யாப்பின்படி ஜனாதிபதி தேர்தலை அப்பதவிக்கு நான்கு வருடம் பூர்த்தியாகும் முன்னர் நடத்த முடியாது. அதாவது 2014 நவம்பருக்கு பின்னராகும். ஆனால் அதற்காக இன்னும் ஒன்றரை வருடங்கள் காத்திருந்தால் அது அரசாங்கத்தின் உடல் நலத்திற்கு கேடு ஏற்படுவதை தவிர்க்க முடியாது. கூடியவரை ஜனாதிபதி தேர்தலுக்கு சென்றாக வேண்டும். ஆனால் அதை அரசியல் திருத்தத்தின் மூலமே சாதிக்க முடியும். அதற்கிணங்க இன்னுமொரு அரசியல் திருத்தத்திற்கு அரசாங்கத்தின் கவனம் திரும்பியுள்ளதாக தெரியவருகிறது. அரசியலமைப்பு திருத்தத்தின் மூலமாக ஜனாதிபதி பதவிகாலத்தை 6 வருடத்திலிருந்து 5 வருடமாக குறைத்து அத்துடன் ஜனாததிபதி தேர்தலை நடத்தும் தகைமையை பதவிகாலம் 4 வருடத்திற்கு பதிலாக 3 வருடமாக மாற்றுவதே அரசாங்கத்தின் நோக்கமாக உளள்து. அதன்படி 2013 நவம்பரில் அதாவது இன்னும் 6 மாததத்தில் தேர்தலை சந்திப்பதற்கு மஹிந்தவுக்கு முடியுமாயிருக்கும்.

அது அரசாங்கம் சிந்திக்கின்ற விதமாகும். மஹிந்தரின் அபிலாஷைகளுமாகும். ஆனால் அது யதார்த்தமாகுமா இல்லையா என்பதை தீர்மானிப்பது ராஜபக்ஸவின் விருப்பத்தினால் மட்டுமல்ல.எதிர்வரும் நாட்களில் தோன்றும் அரசியல் சூழ்நிலையினாலாகும். அதன்போது உள்ளக, வெளிச்க்திகள் அரசியல் உபாயத்தை கையாளும் விதத்திலேயே அது தீர்மானிக்கப்படும். எவ்வாறாயினும் ராஜபக்ஷாக்களின் நிலைமை மோசமடைந்து வருகிறது என்பது மட்டும் உண்மை.

இந்த அரசியல் போக்கை தமக்கு சாதகமாகப்பயன்படுத்தி ஐ.தே.க செயற்படுவதைக் காணக்கூடியதாக இருக்கிறது. ஐ.தே.காவின் எதிர்பார்ப்பும், அபிலாஷைகளாக உக்கிரமடைந்துவரும் அரச எதிர்ப்பை தமது அரசியல் நோக்கத்திற்கு பயன்படுத்தி கொள்ளையடிப்பதாகும். ரணில் விக்கிரமசிங்க அண்மைக்காலமாக சுயாதீன அமைப்புக்க்ளை ஆங்காங்கே அமைத்து ( மாதுலுவாவே சோபித்த தேரரின் நியாயத்திற்கான இயக்கம், சமன் ரத்னப்பிரியவின் தொழிற்சங்க இயக்கம்) இப்போது ஒன்றுசேர தொடங்கியுள்ளன. ராஜபக்ஷ ரெஜிமெண்டை வீழ்த்துவது பற்றி அரசாங்கத்தை மாற்றும் தேர்தலைப்பற்றி ரணிலின் அண்மைக்கால பேச்சுக்களை பார்க்கும்போது நோக்கம் புரிகிறது. அரசாங்கத்திற்கு எதிராக தோற்றம்பெறும் சகல மக்கள் எதிர்ப்பையும், போராட்டங்களையும் தந்ரோபாயமாக தமது நோக்கத்துடன் இணைந்த பச்சையாக வெட்கமின்றி சூறையாடுவதற்கு ஐ.தே.க எடுக்கும் முயற்சிப்பது அவர்களின் நோக்கத்தின் உள்நோக்கம் என்னவென்று தெளிவடைகிறது.

அதிகாரத்தை கைப்பற்றுவதை மையமாகக்கொண்டு தயாரிக்கப்படும்

7ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் மீது சுமத்தப்படும் பாவச்சு



மின்சாரசபை நட்டத்தில் இங்குவதாக கூறி அரசாங்கம் மின்சார கட்டணத்தை அதிகரித்தது. அரசாங்கம் மின்சார சபையின் நட்டத்தை அறவிடுவதற்கு மக்களையே பலிகடாவாக்கியுள்ளது. அதில் குற்றவாளிகளாக்கப்பட்டிருப்போர் மக்களேயாகும். பாராளுமன்றத்தில் அறிக்கையொன்றை வெளியிடும் அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் தலைவர் அமைச்சர் டியு குணசேகர அவர்கள் அண்மையில் அரச நிறுவனங்கள் நாட்டை அழித்து வருவதாக தெரிவித்தார். அவரின் கூற்றின்படி மின்சாரசபை, பெற்றோலியம், விமான சேவைகளின் நட்டம் 215 மில்லியன் ரூபாவை மிஞ்சியுள்ளது. உலகத்தின் பெரிய அமைச்சரவைக்கு சம்பளம் மற்றும் சலுகைகளை வழங்கி பராமரித்துவரும் மக்களுக்கு இந்த அமைச்சர்களினால் அழித்தொழித்து, நட்டமடையும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ள அரச நிறுவனங்களின் நட்டத்தையும் மக்கள் சகித்துக்கொண்டாக வேண்டும். அதற்கு சிறந்த உதாரணம் இலங்கை மின்சார சபையாகும். வினைத்திறனற்ற நிர்வாகத்தால் மேற்கொள்ளப்படும் ஊழல், மோசடியைப்போன்றே முதலாளித்துவ அரசாங்கத்தின் அரசியல்வாதிகளால் எடுக்கப்படும் தவறான முடிவுகளும் அம்மக்கள் மீது சுமத்தப்படும் சுமையும் நட்ட

| வருடம் | இலாபம் / நட்டம் மில்லியனில் | வருட இறுதியில் தேறிய சொத்துக்களின் நிலை |
|---|---|---|
| 2007 | 3,984 | 13,568 |
| 2008 | 14,952 | 1,416 |
| 2009 | 11,353 | 13,038 |
| 2010 | 26,923 | 39,952 |
| 2011 | 94,508 | 131,324 |

பட்டியலில் அடங்குகிறது. மின்சாரசபை இவைக-ளில் ஒன்று மட்டுமே. மொத்த முதலாளித்துவ சமுதாயத்தில் பொருளாதார அடித்தளத்தை பாதுகாக்கின்ற நிறுவன கட்டமைப்பு தற்போது பராமரிக்க முடியாத அளவுக்கு இற்றுப்போயுள்ளது. இந்த முதலாளித்துவ அரச நிறுவனங்களைப் பாதுகாப்பதற்கு அப்பாவி ஏழை மக்களளே வரி செலுத்துகின்றனர்.அரச நிறுவனங்கள் சிலவற்றில் இடம்பெருகின்ற பாரிய பொருளாதார ரீதியிலான அழிவினை ஆராய்ந்து பார்க்கும்போது இதனை தெளிவாக புரிந்துக்கொள்ள முடியும்.

### எண்ணெய் கூட்டுத்தாபனம்

பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தற்போது 10000 கோடி ரூபாய் நட்டத்தை அடைந்துள்ள நிறுவ-னமாக மாறியிருப்பதாக "ஊழல் எதிர்ப்புக் குரல்" அமைப்பு அண்மையில் நாட்டிறடகு வெளிப்படுத்தியது. கடந்த வருடத்தில் அடைந்த மொத்த நட்டம் 3000 கோடி ரூபாவாகும். மீனவர்களுக்கு வழங்கவிருந்த எரிபொருள் மானிய மோசடி 550 கோடி ரூபாவாகும். அரச கணக்காய்வாளரின் அறிக்கையின்படி 2011ம் ஆண்டிண் இறுதியில் தேறிய சொத்துக்களின் நிலை மறைக்கனிய நிலையில் 131.324 ரூபாவாக இருந்தது.

இப்பாரிய நட்டமானது 2011ம் வருட இறுதியில் 13,132 கோடி ரூபாவுக்கு பொறுப்பு கூற வேண்டியவர்கள் மக்களா என்று கேள்வி எழுகிறது. ஹெஜிங் கொடுக்கல் வாங்கலுக்கு அனுமதி கொடுத்தவர்கள் மக்களா? தரம் குறைந்த டீசல், பெட்றோலை தருவிப்பதற்கோ எண்ணெய் நிரப்பும் நிலையங்களை பகிர்ந்தளிப்பதற்கோ மக்கள் தொடர்புபடவில்லை. இந்திய ஓயில் கம்பனியுடனோ மற்றும் இலங்கை தனியார் கம்பனியுடனோ திருட்டுத்தனமாக கொடுக்கல் வாங்களில் இந்நாட்டு மக்களுக்கு எவ்வித தொடர்பும் கிடையாது.

ஆனால் அவற்றின் பெ-றுபேறுகளால் ஏற்படும் பாரிய நட்டத்தை சுமையாக அரசாங்கம் நேரடியாகவும் மறைமு-கமாகவும் மக்கள் மீதே சுமத்துகிறது. பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் தற்போது தோன்றியுள்ள எண்ணெய் சுத்திகரிப்பு நெருக்கடியானது மீண்டும் எரிெ-பாருள் விலையை அதிகரிப்பதற்கான சந்தர்ப்பத்தை உருவாக்கியுள்ளது. அரசாங்கம் எண்ணெய் சுத்திகரிப்பிற்கு தேவையான மசகு எண்ணெய் தருவிப்பானது போதுமான அளவு களஞ்சியத்தில் இருக்கும்போது அல்ல. அதன-ால் குறைந்த பட்ச சுத்திகரிப்பு இயந்திரங்களுக்கு பயன்படுத்த வேண்டிய மசகு எண்ணெய் தொகை கூட்டுத்தாபனத்தில் இல்லாத நிலையில் குறைந்தபட்ச எண்ணெய்யையே பாவிக்கிறது. அது இயந்திரங்களை இயக்கும்போது சிக்கலை ஏற்படுத்துவதுடன் மேலதி-கமாக கூட்டுத்தாபனம் பாரிய நட்டத்தை எதிர்கொள்ளும். இறுத-ியில் கடந்த மே 15 எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை மூடுவதற்கு முடிவு செய்ததும் போதுமான அளவு மசகு எண்ணெய் இல்லாததன் காரணத்தினாலாகும்.

மீண்டும் சுத்திகரிப்பை ஆரம்பிப்பதற்கும் மீண்டும் பல கோடி ரூபாய் நட்டம் ஈட்டக்கூடிய பேரழிவு காத்துக்கொண்டிருக்கிறது. இவை அனைத்தும் அரசாங்கத்தின் தரகுகளுக்கான முடிவுகளின் பெபே-றுகளாகும். இப்போது தேவையான அளவு எண்ணெய் இல்லாததன் காரணத்தினால் அதிக விலைக்கு சாதாரண சந்தையில் அவசரமாக எண்ணெய் கோருவதற்கான சந்தர்ப்பம் ஆட்சியாளர்களுக்கு ஏற்பட்டுள்ளது. இன்னும் சில மாதங்களில் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நட்டத்தை தாங்கிக்கொள்ள முடியா-தென கூறி எரிபொருள் விலை-லயை அதிகரிக்கவும் கூடும். இந்த அழிவின் சுமையை மக்கள் மீது ஏற்றும் முறையாகும். இறுதியாக போதுமான அளவு மசகு எண்ணெய் உரிய நேரத்தில் களஞ்சியப்படுத்தாதன் நட்ட ஈட்டை செலுத்தவேண்டியிருப்பது அன்றாடம் வாழ்வதற்கு வழியில்லாது வறுமையில் வாடும் மக்களேயாகும்.

### எண்ணெய் கடன்!

2011ம் ஆண்டு டிச: 31 எண்ணெய் கூட்டுத்தாபனத்தின் கடன் பெறுந-ரின் தொகை (எண்ணெய் கடனுக்கு வழங்குவதால் கிடைக்க வேண்டிய கடன் தொகை) 115,027 மில்லியன் ரூபாவாகும். அதில் கூட்டுத்தாபனம் தமக்கு கிடைக்க வேண்டிய கடனாக 66,341 மில்லியன் ரூபாய் மட்டுமே உறுதிப்படுத்திக் கொண்டிருக்கிறது. 48,686 மில்லியன் ரூபாய் (48,68 கோடி) ரூபாய் குறைந்த பட்சம் தமக்கு கடன் செலுத்த வேண்டிய கடனாளிகள் பற்றியு முகவரியை

*2011 ஆகும்போது முகவரி தெரியாத கடனாளிகளிடமிருந்து கிடைக்க வேண்டிய மொத்த தொகை 48.686 மில்லியன் ரூபாவாகும்.*

| | |
|---|---|
| 2011ம் ஆண்டில் கல்விக்கான மொத்த செலவு | 11,742 |
| சுகாதாரத்திற்கான மொத்த செலவு | 7,360 |
| நீர் வழங்களுக்கான | 16,542 |
| சமுர்த்தி கொடுப்பனவுகள் | 6,200 |
| கிராம உட்கட்டுமான பணிகள் | 24,751 |
| போக்குவரத்து | 22,090 |
| உட்கட்டமைப்பு | 24,751 |
| விவசாயத்திற்கு | 8,471 |
| நீர் பாசனம் | 9,792 |
| மின்சாரத்திற்கு | 19,309 |

கூட கூட்டுத்தாபனத்திற்கு தெர-ியாது. அதை உறுதிப்படுத்துவது கடனாளியிடமிருந்தும் 47,734 மில்லியன் ரூபாய் வருடம் 1ல் இருந்து 17 வரையிலான பழைய கடனாளிகளாகும். எண்ணெய் கூட்டுத்தாபனத்திற்கு கிடைக்க வேண்டிய ஆனால் அரச கூட்டுத்தாபனத்தில் குறைந்த பட்சம் முகவரி கூட தெரியாதவர்களின் தொகை 46,686 மில்லியன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ம் அரசாங்கத்தின் ...சுமை!



செய்ய முடியும். 2011ஆம் ஆண்டில் துறைமுக விமான நிலைய வரி 41,066 மில்லியன் ரூபாய்களாகும். அது மட்டுமல்ல. 2011ம் ஆண்டில் மொத்த ஏற்றுமதி வரியும் இந்த கடனின் பெறுமதியைவிட குறைவாகும். கடனாளிகளிடமிருந்து அறவிடப்படாத தொகை 46,686 மில்லியன் ரூபாய்களாகும். இறக்குமதி வரியின் தொகை 2011ல் 48,276 மில்லியன் ரூபாய்களாகும். இனங்காணப்படாத கடன்படுனர் 48,686 2011 ம் ஆண்டு இறக்குமதி வரி 48,276

கட்டட கலைஞர் ஒருவர் பயினென்ஸல் டைம்ஸ் சஞ்சிகைக்கு எழுதிய கட்டுரையில் குறிப்பிட்டிருப்பதாவது உலகத்தில் அதிக செலவைக்கொண்டு அமைக்கப்படும் அதிவேகப்பாதை கொழும்பு கட்டுநாயக்க அதிவேகப் பாதையாகும். உத்தேச கொழும்புகண்டி அதி வேகப்பாதையின் தூரம் 90 கி.மீட்டராகும். உத்தேச மதிப்பீட்டு செலவு 30 பில்லியன் ரூபாய்களாகும். அதன்படி ஒரு கி.மீட்டருக்கு 306 மில்லியன் ரூபா செலவாகிறது. கொழும்பு

*அரச நிறுவனங்களின் நட்டமும் மக்களின் நலனோம்புகைக்கு பயன்படுத்தக்கூடிய பணம் (மில்லியனில்)*

| வருடம் | 2008 | 2009 | 2010 | 2011 |
|---|---|---|---|---|
| மின்சாரசபை | 33,869 | 9,008 | 4,832 | 19,265 |
| எண்ணெய் கூட்டுத்தாபனம் | 14,950 | 11,353 | 26,923 | 94,508 |
| விமான கம்பனி | - | 2,968 | 382 | 19,679 |
| மிஹீன் லங்கா | 1,300 | 1,221 | 940 | 1,968 |
| 4 நிறுவனங்களின் மொத்த நட்டம் | 50,119 | 24,280 | 33,077 | 135,420 |

தேசத்தை கட்டியெழுப்பும்வரி 21,158
துறைமுக,விமான நிலைய வரி 41,066

கட்டுநாயக்க தூரம் 24 கி.மீட்டராகும் உத்தேச செலவு 24 பில்லியன் ரூபாவாகும். அதன்படி ஒரு கி.மீட்டருக்கான செலவு 100 கோடி ரூபாவாகும். தெரியவரும் அறிக்கைக்கேற்ப தெற்கு அதி வேகப்பாதைக்கான மொத்தச் செலவு ஒரு பில்லியன் டொலராகும். அப்பணத்தை ஈட்டுவதற்கு ஒரு நாளைக்கு குறைந்த பட்சம் 7000 வாகனங்கள் அப்பாதையில் பயணித்தாலும் அப்பணத்தை ஈட்டுவதற்கு 200 வருடங்களாகும். இறுதியாக பழைய ஆளுனருக்கு இருந்த பாதை அமைக்கும் நோய் நவீன அரசனுக்கும் ஏற்பட்டிருப்பது புதுமையல்ல குடியேற்ற வெள்ளையர் அமைத்த புகையிரதப் பாதையில் ஒரு கி.மீட்டராவது நீடிக்காது, அதிவேகப் பாதைகளை அமைத்து. இந்த சகல அழிவுமிக்க செலவுகளில் தரகு (கொமிஸ்) தொகையின் சுமைகள் அனைத்தும் நேரடியாகவும் மறைமுகமாகவும் சுழன்று மீண்டும் மக்கள் தலையிலேயே வீழ்கிறது.

## *அதி வேகத்தின் குறுக்கத்தெரு*

| *நிதி நிலமை:– எயர் லங்கன் விமான நிறுவனம் ரூபா மில்லியன்* | 2010/2011 | 2011/12 | 2012/13 (9 மாதத்திற்கு) |
|---|---|---|---|
| வருமானம் | 77,725 | 90,544 | 80,791 |
| செலவு | 73,188 | 99,395 | 94,293 |
| லாபம்/நட்டம் | 3,938 | 8,851 | 13,498 |
| இலாபம் மட்டும் | 382 | 19,679 | 23,044 |
| மொத்த நடைமுறை சொத்து | 38,139 | 66,571 | 76,752 |
| மொத்த நடைமுறை பொறுப்பு | 34,923 | 68,010 | 94,111 |

பிரித்தானியர்கள் இலங்கையை கைப்பற்றி மலைநாட்டைக் கைப்பற்றும்போது இலங்கையில் பெருந்தெருக்களாக கொழும்பு, காலி நகரங்களுக்கான பாதை மட்டுமே இருந்தது. அப்போது பெருந்தெருக்களை அமைப்பதற்கு விருப்பம் கொண்டிருந்தவர் ஆளுனர் எட்வர்ட் பார்ன்ஸ் அவர்களாகும். அவர் இலங்கைக்கு முதலில் தேவைப்படுவது பாதை அதாவது முதலாவதும், இரண்டாவதும், மூன்றாவதும் தேவைப்படுவது பாதையேயாகும் என்றார். அதற்காக அவர் அக்கறையோடு இலங்கையில் பாதைதகளை செப்பனிட்டார்.தற்போதைய ராஜபக்ஷ அரசாங்கமும் பாதைகள் தொடர்பாக எட்வர்ட் பார்ன்ஸின் கொள்கைகளையே பின்பற்றி வருகிறது. அது குறுகிய காலத்து தரகு (கொமிஸ்) பணத்திற்காகும். பிரசித்தப்பெற்ற

ரூபாவாகும் அது அந்த வருடத்தில் சமுர்த்தி கொடுப்பனவுகளைப் போன்று 8 மடங்காகும். 2011ல் சுகாதாரத்திற்கு செலவழித்ததைப் போன்று 06 மடங்காகும்.
அரசு தனது ஒரு நிறுவனமாக எண்ணெய் கூட்டுத்தாபனத்திற்கு கிடைக்க வேண்டிய கடன் தொகையை இனங்கானுமானால் தேசத்தை கட்டியெழுப்பும் வரியை இரண்டு வருடத்திற்கு இரத்துச்செய்ய முடியும். 2011ம் ஆண்டில் திரட்டப்பட்ட தேசத்தை கட்டியெழுப்பும் வரியின் மொத்த தொகை 21,158 மில்லியன் ரூபாவாகும். துறைமுக விமான நிலைய வரியை முற்றாக இரத்துச்

*மிஹீன் லங்கா நட்டத்திற்க மக்களின் திரைசேரி தோழ்கொடுக்கும் விதம்*

| நட்டம் | 2011/12<br>1,968 | 2010/11<br>940 | 2009/10<br>1,221 | |
|---|---|---|---|---|
| திரைசேரி ஏற்பாடுகள் மில்லியன் ரூபா | 2012<br>507 | 2011<br>406 | 2010<br>1508 | 2009<br>2882 |
| பணிப்பாளர்களின் கொடுப்பனவுகள் ரூபாய் | 2011<br>11,244,991 | 20104<br>993,075 | 2009<br>450,000 | |

## *மிஹீன் லங்கா மகிமையின் பாவச்சுமை*

இலங்கை விமானச்சேவை கம்பனியின் 51.06% இலங்கை அரசுக்கு சொந்தமானதாகும். இலங்கை வங்கிக்கு 23.54% உரிமையை கொண்ட அரச நிறுவனமாகும். வரலாற்றில் ஜே.ஆர் ஜயவர்தன ஜனாதிபதி நவீன விமானச் சேவையொன்றை அமைப்பதற்காக. லீ குவான் யூ சிங்கபூர் பிரதமரிடம் உதவி கேட்டப்போது அவர் எழுத்துமூலமாக தெரிவித்திருப்பதாவது முதலில் பொது பயணிகள் சேவையையும் அதற்கான கட்டுமான பணிகளை முனனிறுத்தி இரண்டாவதாக விமானச் சேவையை பற்றி கனவு காணும்படி கேட்டுக்கொண்டார். அந்த ஆலோசனையின் முக்கியத்துவம் எயார் லங்கன் விமான சேவை கம்பனி கோடிக்கணக்கன அரச சொத்துக்களை அழித்தொழித்து நட்டமடையும்போதே தெரியவருகிறது. இதுதான் எயர் லங்கன் விமானச் சேவையின் தற்போதைய நிலையாகும்.
அதற்கிணங்க 2011/12 ஆம் ஆண்டில 382 மில்லியன் ரூபாய் நட்டம் அடைந்த அரச விமான சேவைகள் 2012/13 வருடத்தில் 9 மாதங்களில் மட்டும் 23,044 மில்லியன் ரூபாய் நட்டமடைந்துள்ளது.
இந்த பாரிய நட்டத்தின் பெறுபேறுகளினால் நிறுவனத்தின் நடைமுறைக் கணக்கை மிஞ்சிய நடைமுறை கணக்கில் பொறுப்புகளால் அதிகரித்துள்ளது. விமானச்சேவை நட்டமடைவதற்காக பெரும் பணியாற்றிய ராஜபக்ஷ அனுசரனையுடன் தயவில் உறவினருக்கு தலைவர் பதவியை பெற்றுக்கொடுத்துள்ள மிஹீன் லங்கா விமானச் சேவையின் மூலம் நிறைவேற்றப்பட்டடிருக்கிறது. கடந்த 5 வருடதில் மட்டும் மிஹீன் லங்கா அடைந்த நட்டம் 8,500 மில்லியன் ரூபாவாகும். 450,000 மிஹீன் லங்கா நிறுவனம் வருடந்தோறும் வருமானம் குறைந்து செல்கிறது. ஆனால் அதிகரித்திருப்பது இலாபம் அல்ல. பணிப்பாளர்கள் பகிர்ந்துக்கொண்ட கொடுப்பனவுகள். அரச நிறுவனத்தை தனிநபர் முதுசொத்தாக பகிர்ந்துக்கொண்டபோது இதைவிட வேறு பெறுபேறுகளை எதிர்பார்கக் முடியாது.
அரச நிறுவனங்களின் நட்டமும் மக்களின் நலனோம்புக்கு பயன்படுத்தக்கூடிய பணம்.
2008-2009-2010-2011
மின்சாரசபை கீழ்கானும் அறிக்கைகள் இரண்டையும் ஒப்பிடுகையில்
இலங்கை சமூகத்திற்கு உரித்தாக்கப்பட்டிருக:கும் அழிவின் அளவை ஓரளவு புரிந்துக்கொள்ள முடியும். அரச வளங்களும் இலங்கையின் மனித வளங்களையும் பயன்படுத்தும் நான்கு அரச நிறுவனங்களில் 2011ம் ஆண்டில் நட்டத்தை விஞ்சி செல்லும் அளவினை சமூக நலனோம்புகைக்காக பயன்படுத்தவில்லை. மேற்கொண்ட அட்டவணையைப் பார்க்கும்போது தெரியவருகிறது. முழு வருடத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தால் இதைவிட நல்ல பெறுபேறுகள் கிடைக்கப் போவதில்லை. அதன்படி முதலாளித்துவ அரச இயந்திரத்தில் இலங்கைவாழ் மக்களுக்கு உரித்தானதாக இருப்பது அந்த அரச நிருவனங்கள் மக்கள் சேவைக்காக பயன்படுத்துவதற்குப்பதிலாக பொது மக்கள் ஈட்டும் பணத்தில் பராமரிக்கப்படும் “ வெள்ளை யானை” நிறுவனங்கள் மட்டுமேயாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறிவைக்கப்படும் தோட்டப்புற காணிகள்



கடந்த சில ஆண்டுகளாக மலையகத்தை பிரதிநிதித்துவம் செய்யும், அரசாங்கத்திற்கு ஆலவட்டம் பிடிக்கும் சில கட்சிகள் தோட்டத்திலுள்ள தரிசு நிலங்கள் தொடர்பான கருத்தியலை முன்வைத்து பத்திரிகைகளில் சில அறிக்கைகளை விட்டுக்கொண்டிருந்தார்கள். அப்போதே செஞ்சக்தி பத்திரிகையில் மலையக பகுதியில் இந்த செய்திகளின் பின்புலத்தில் ஏதோவொரு விடயம் மறைந்திருப்பதாகவும் அது ஒட்டுமொத்த மலையக தோட்டப்புற மக்களின் வாழ்வுக்கும் உலைவைக்கும் ஒரு செயலாக அமையும் எனவும் தெரிவித்திருந்தோம். அதை எவரும் பொருட்டாக எடுத்ததாக தெரியவில்லை. ஆனால் தற்போது அதன் உண்மையான வடிவம் வெளிவரத்தொடங்கியதும் மகிந்தரின் மைந்தர்கள் கொதித்தெழுந்து நான் முந்தி நீ முந்தி என்று கூக்குரல் இடுகின்றார்கள். அதுதான் தோட்டப்புற 27,000 ஆயிரம் ஏக்கர் காணிகள் இளைஞர்களுக்கு பகிர்ந்தளிப்பு என்பதாகும். அதாவது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் கடந்த வரவு செலவு திட்ட உரையின்போது மிகவும் தெட்டத் தெளிவாக அறிவித்த அறிவிப்பால் மலையகத்தின் மன்னர்கள் அரண்டு போய்விட்டனர். அதாவது மலையகத்தில் உள்ள காணிகளை அதாவது 27000 ஏக்கர் காணிகளை கிராமப்புற இளைஞர்களுக்கு பகிர்ந்தளிக்க போவதாக அறிவித்தார். தோட்டப்புற மக்களையும் எதிர்கால சமுதாயத்தையும் பாதிக்கும் இந்த ஆபத்தை அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் அமைச்சர்களான இ.தொ.கா வினரோ, ம.ம.முன்னணி அமைச்சரோ அல்லது அரசாங்கத்தின் பங்குதாரராக செயல்படும் திகாம்பரமோ அதை எதிர்த்து பேசியதாகவோ அல்லது அதற்கு எதிர்ப்பு தெரிவித்ததாக தெரியவில்லை. அரசாங்கம் திட்டமிட்டே குறிப்பாக வடக்கு,கிழக்கில் நில ஆக்கிரமிப்பை மேற்கொண்டது போன்று மலையகத்திலும் நில சுவிகரிப்பை மேற்கொண்டுவருகிறது. தனது மகன் பொறுப்பாக இருக்கும் இளைஞர் அணியில் அங்கம் வகிக்கும் கிராமப்புற இளைஞர்களுக்கே இந்தக்காணிகள் வழங்கப்படுமென கதை அடிபடுகிறது. ராஜபக்ஷவின் அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் இந்த திட்டத்தால் நாட்டில் இன முரண்பாடுகள் ஏற்படவும் வாய்ப்புள்ளது. 190 வருட வரலாற்றைக்கொண்ட இந்த மக்களுக்கு ஒரு அடி நிலம்கூட இல்லாத நிலையில் தோட்டப்புற காணிகள் பகிர்ந்தளிப்பு என்பது எவ்வளவு பதிப்பை ஏற்படுத்தும் நிகழ்வாகும். ராஜபக்ஷவின் இந்த திட்டத்தை தோட்கடித்தே தீர வேண்டும். அதற்க்காக தோட்டத் தொழிலாளர்கள் அணிதிரண்டிட வேண்டும். அதற்கு தலைமைத்துவம் கொடுப்பதற்கு மக்கள் விடுதலை முன்னணி தயாராகவே இருக்கிறது. இந்நிலங்கள் தொடர்பாக கூற முன்னர் திருவிழாவின் கசையடி காரார்களைப் போல் சில மலையக அரசியல்வாதிகள் சமிஞ்சை எழுப்பியதன் பின்னணியின் இரகசியம் இன்னும் முடிவுக்கு வராத நிகழ்வாதகவே இருக்கிறது. எதிர்காலத்தில் மலையக தோட்டப்புற மக்களின் நிலை எவ்வாறான திசைக்கு தள்ளப்படும் என்பதை தொடர்ந்து செய்திகளாகவும். கட்டுரைகளாகவும் நாம் எழுதிக்கொண்டு வருவது மட்டுமல்லாது அதனை எமது அரசியில் கலந்துரையாடல் மற்றும் அரசியல் மேடைகள், சபைகளில் எடுத்துக்கூறியுள்ளோம். ஆனால் தோட்டத் தொழிலாளர்களோ மலையகத்தில் உள்ள இளைஞர்களோ, புத்திஜீவிகளோ, துறைசார்ந்த அதிகாரிகளோ அதை கணக்கில் எடுப்பதில்லை. அதன் பிரதிபலனால் எதிர் காலத்தில் மலையக சமூகம் பாரிய சவாலை எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்படும்.

### தோட்டங்கள் சிதைய ஐ.தே.கவின் பங்கு!

1992ம் ஆண்டு அன்றைய ஆட்சியாளர்களாக இருந்த ஐக்கிய தேசிய கட்சியினர் தோட்டங்களை மக்கள்மயம் என்னும் அழகான பெயரால் தனியார் முதலாளிகளுக்கு 99வருட குத்தகைக்கு விட்டனர். அவர்கள் 22 கம்பனிகளின் பெயரால் தோட்டத் தொழிலாளர்களின் உழைப்பை மட்டும் சுரண்டவில்லை. மலையகத்தின் வனப்பையும், இயற்கை வளங்களான மரங்கள், கருங்கற் பாறைகள், நீரூற்றுக்கள், ஓடைகள் என்பவற்றையும்கூட அழித்தொழித்தனர் அதன் பிரதிபலனாக தேயிலை மலைகள் வரண்ட நிலைக்கு தள்ளப்பட்டு தேயிலை செய்கை செய்ய முடியாத நிலைக்கு தள்ளப்படவே டேபன்டைன் மற்றும் வேறு காட்டு மரங்கள் நடப்பட்டன. சிறிது காலத்தில் அந்த மரங்கள் வெட்டப்படவே காலப்போக்கில் அந்நிலங்களில் தேயிலை பயிர்செய்கை மேற்கொள்ளப்படாது பற்றை நிலங்களாக மாறிவிடவே அவ்வாறு இன்று மலையகத்தின் தேயிலை பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்ட பல ஆயிரக்கணக்கான ஏக்கர் காணிகள் பற்றை நிலமாக காட்சியளிக்கிறது. அந்த பற்றை நிலங்கள் தான் அரசாங்கத்தால் குறி வைக்கப்பட்டுள்ளது. தோட்டங்களை 1992ம் ஆண்டு தனியாருக்கு குத்தகைக்கு விட தீர்மானம் எடுத்தபோது மலையகத்தின் பிரதான கட்சிகள் என்ற கட்சிகள் ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கத்தின் அமைச்சரவையில்தான் இருந்தது. அவர்கள்தான் அதற்கு ஆதரவு வழங்கி அந்தப்பயணத்தை ஆரம்பித்து வைத்தவர்களாகும். இன்றும் மஹிந்த ராஜபக்ஷ எடுத்து வைத்திருக்கு இந்த மோசடியான திட்டத்திற்கு மஹிந்தரின் காலடியில் கிடக்கும் மலையகத் தலைவர்களான அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான்,அமைச்சர் இராதா கிருஸ்னன்,அமைச்சர் அல்லாத திகம்பரம், தன்னை மஹிந்தரின் பிள்ளையாக இனங்காட்டிக்கொள்ள முயலும் முன்னாள் பிரதியமைச்சர் வுடிவேல் சுரேஸ் போன்றவர்கள் பூரண ஆதரவை கொடுத்த அப்பாவி தோட்டத் தொழிலாளர்களின் காணிகளை காவு கொள்ள வளிசமைத்துக்கொடுக்கின்றார்கள்.

### தோட்டங்களை அழிக்கும் பல சட்டமூலங்கள்

தற்போதைய சூழ்நிலையில் அரசாங்கம் உற்பத்தி பொருளாதாரத்தில் இருந்து விலகி சேவை பொருளாதாரத்தை நோக்கி தனது பயணத்தை ஆரம்பித்திருக்கிறது. அதன் ஆரம்பமாக உல்லாச பயணத்துறையை கட்டியெழுப்பும் திட்டம், இத்திட்டத்தை வெறுமனே பார்க்கும்போது எமது நாட்டிற்கு வருவாய் வரும் ஒன்றாக எவரும் கருதலாம் அதன் மறுபுறமான சில ஆபத்துக்களையும் ஆராய்ந்து பார்க்க வேண்டும். அரசாங்கம் முன்னுரிமை அளித்துதுள்ள இந்த திட்டத்திற்கு தோட்டப்புறங்கள் பலியாவதை தவிர்க்க முடியாது. அதாவது உல்லாச பயணத்துறையை ஊக்குவிக்கவும் வெளிநாடுகளில் இருந்து வரும் உல்லாச பயணிகளுக்கு தகுந்த வசதிகளை செய்து கொடுக்கவும் பல அபிவிருத்தி திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. அவற்றில் அதிவேக நெடுஞ்சாலைகள், விமான நிலையங்கள், கடல் விமான சேவை, போன்றன உதாரணங்களாகும். ஐரோப்பவை சேர்ந்த உல்லாச பயணிகள் கரையோர பிரதேசங்களையே பெரிதும் விரும்புவர் அவர்கள் கொழும்பை வந்தடைந்தவுடன் தென்பகுதிக்கு செல்ல அதிவேக பாதைகள், விமான நிலையங்கள், கடல் விமான சேவை என்பனவும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதே போன்ற ஐரோப்பாவை அல்லாத உல்லாச பயணிகள் வரும்போது அவர்கள் நாட்டின் ஏனைய பகுதியையே விரும்புவர் அதிலும் மத்திய மலைநாடு குறிப்பிடக்கூடியதாகும். அதனை குறிப்பிட்டுதான் இன்று பாராளுமன்றத்தில் இன்னுமொரு சட்டமூலம் கொண்டுவரப்பட்டுள்ளது. அதுதான் நட்டத்தில இயங்கும் நிறுவனங்களை அரசாங்கம் பொறுப்பேற்கும் சட்டமூலம் அந்த சட்டமூலத்திற்கு மலையகத்தைச் சேர்ந்த எல்லாத் தமிழ் அமைச்சர்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும் வாக்களித்திருப்பது குறிப்பிடத்தக்கது. அந்த சட்டமூலம் கொண்டுவரப்பட்டிருப்பதன் காரணமே உல்லாசப்பயணத்துறைக்கு ஏற்ற இடம் மலைநாடு, மலைநாட்டில் உல்லாசப் பயணத்துறையை கட்டியெழுப்ப வேண்டுமெனில் அதற்கு பெரும் தடையாக இருப்பது தேயிலை தொழிற்துறையாகும். அதை திட்டமிட்டு சீரழிப்பதாலும், தரிசு நிலங்கள் என்ற போர்வையில் பெயரலவில் சிலருக்கு பகிர்ந்தளித்துவிட்டு பின்னர் முழுமையான ஏல விற்பனையில் அரசாங்கம் ஈடுபடக்கூடிய சாத்தியக்கூறுகள் தென்படுகின்றன. அதன் ஆரம்பமாகவே நுவரெலியா பீட்று தோட்டத்தில் விமான நிலையம் அமைத்தல், நுவரெலியாவை அண்மித்த நீர்நிலைகளில் சீ பிலேன் இறக்குவதற்கான வசதிகளை அமைத்தல் , தோட்டங்கள் தோறும் லிப்டன் சீட், மிலேனியம் பொயின்ட், மிஸ்ட் சீட், போன்ற சிறிய உல்லாச பயணிகளை கவரும் மையங்களையும், தேயிலைத் தொழிற்சாலைகள் பலவற்றை ஹோட்டல்களாகவும், துரைமார் பங்களாக்களை சேர்க்கிட் விடுதிகளாகவும் மாற்றியுள்ளனர். இவைகள் தோட்டப்புறங்களை அழிப்பதற்கான முன்னேற்பாடுகளாக இருப்பதை அவதானிக்க முடிகிறது. தரிசு நிலங்கள் என்ற கருத்தியலை முன்னிலைப்படுத்தும்போது மக்களின் கவனம் திசைதிருப்பப்படும்போது தமது திட்டத்தை இலகுவாக மேற்கொள்ள முடியும் என்ற எண்ணம் அரசாங்கத்திடம் இருக்கலாம். அதாவது மக்களின் எதிர்ப்பு கிளம்பும் சந்தர்ப்பத்தில் அதற்கு தலைமை தாங்கும் தொழிற்சங்க தலைமைகளை அரசாங்கம் தமது வலையில் போட்டு வைத்துள்ளது. இன்று மலையக அரசியல் தலைவர்கள் என்று சொல்லிக்கொள்வோர் பலர் பல்வேறுபட்ட வியாபாரிகளாகவே இருக்கின்றார்கள் சிலர் கூறுவதைப்போல் மதுக்கடை உத்தரவு பத்திர உரிமையாளர்கள் மலையக அமைச்சர்கள் மந்திரிகள்.அவர்களின் மதுக்கடைகள் அனேகமானவை நுவரெலியா மற்றும் பதுளை போன்ற தோட்டப்புறத்தை முன்னிலைப்படுத்திய மாவட்டங்களிலேயே உள்ளதாக தெரிகிறது. அதே போன்று நாளை அரசாங்கத்தால் இந்த தலைமைகளுக்கே உல்லாச பயணத்துறையை கட்டியெழுப்பும் திட்டவரைபையும் கையளிக்கலாம் அதன் போது மக்களின் எதிர்ப்பை சமாளித்துவிடலாம் என்ற திட்டமும் அரசாங்கத்திடம் இருக்கலாம். அதற்கான சன்மானமாக எதை வேண்டுமானாலும் வழங்கி தமது திட்டத்தை நிறைவேற்றிக்கொள்ள வாய்ப்புள்ளது.

எதிர்வரும் காலங்களில் பல்வேறுவிதமான சட்டமூலங்களை பயன்படுத்தி மலையகத்தின் வனப்புமிக்க எழிலும், தோட்ட மக்களின் வாழ்வும் தேயிலைத்தொழிற்துறையும் முற்றுமுழுதாக அழிக்கப்படலாம். அது மட்டுமல்ல இன்று கம்பனிகளிடம் சிக்கியுள்ள தோட்டங்கள் நாளை தனி முதலாளிகளிடம் கைமாற்றப்படலாம் அதன் பின்னர் தேயிலை தொழிற்துறை மாற்றப்பட்டு வேறு பயிர்செய்கை என்ற போர்வையில் தோட்டங்கள் மூடப்படுவதோடு தோட்டங்களிலுள்ள மக்களும் வெளியேற்றப்படும் அபாயம் வெகுதொலைவில் இல்லை. என்பதை தோட்டத் தொழிலாளர்கள் புரிந்துக்கொள்ள வேண்டும். அதற்கும் மலையக தலைமைகள் துணைபோவார்கள் என்பதை எப்போதும் எதிர்ப்பார்க்க வேண்டிய ஒன்றே. அதனை எதிர்த்து போராடக்கூடிய போராட்ட குணம் கொண்ட பாட்டாளி வர்க்க அமைப்பான மக்கள் விடுதலை முன்னணியை நோக்கி மக்கள் அணிதிரள வேண்டும். அற்ப சொற்ப சலுகைகள் கிடைக்கும் என்ற நோக்கில் மலையக மகள் சிந்திக்க தவறும் பட்சத்தில் நாளை பாரிய துன்பத்திற்கு முகம் கொடுக்கப்போவதும் மலைய சந்ததியினரே.எனவே இன்றைய மலையகத்தின் நிலைமை என்பது மிகவும் பாரதூரமானது. அதைதடுத்து நிறுத்திட மலையக மக்கள் ஒன்று சேரவேண்டிய காலம் அண்மித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல்...3ம் பக்கத்தொடர்



ஐ.தே.க வின் நடவடிக்கைளை தெளிவாக கூற முடியாவிட்டாலும் இப்போதைய நிலையில் தெரிவது இதுவாகும். ஜனாதிபதி தேர்தலை முதலில் நடத்துவதில் அதை வெற்றிக்கொள்ள முடியுமென்றால் ரணில் போட்டியிடுவார். அல்லது நிறைவேற்று அதிகாரத்தை ஒழிப்பது, ஜனநாயகம். வடக்கிற்கான அதிகாரப்பகிர்வு போன்ற பிரச்சினைகளை முதன்மையாகக்கொண்டு பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதற்கான வாய்ப்பிருக்கிறது. அதற்கான சூழலை தற்போது சோபித தேரர் உருவாக்கி வருகிறார். ஜனாதிபதி தேர்தலின் பின்னர் அதில் கிடைக்கின்ற பெறுபேறுகளை தமக்கு சாதகமாக்கிக்கொண்டு பொதுத் தேர்தலில் போட்டியிட்டு அதை வென்று அரசாங்கத்தை அமைப்பதே ஐ.தே.கா வின் நோக்கமாக இருக்ககூடும். அதற்கான துணைப்படைகள் தற்போது தயார் நிலையில் உள்ளது. அதில ஒன்று சந்திரிக்காவின் தலைமையில் அரசாங்கத்தில் உள்ள மஹிந்த எதிர்ப்பாளர்கள் சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள், மகஜன கட்சியை சேர்ந்தவர்கள் அனைவரையும் ஒன்று திரட்டுவதாகும்.

இதற்கு புறம்பாக தேர்தலை முன்னரே கொண்டுவந்த தமது அதிகாரத்தை அதிகரித்துக்கொண்டு அதன் பிறகு தேர்தலை வெல்வது பற்றி அவர்கள் சிந்திப்பதாக தெரிந்தாலும் ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் பொதுத்தேர்தலை கொண்டுவருவது எப்படியென்பது தெளிவற்றதாகும்.

அதிகாரத்திற்கு வருவதற்காக ரணிலின் அபிலாஷையில் சிக்கல் இல்லாமல் இல்லை. ஐ.தே.க பல நெருக்கடிகளை எதிர்கொண்டிருக்கிறது. தற்போது கற்பனாவாதத்தில் உள்ள திட்டங்கள் யதார்த்தமாகுமா என்பது சந்தேகத்திற்கிடமானது. அரசியல் சக்திகள் அணித்திரலும் விதத்திலும் அவை ஒன்றுடன் ஒன்று எதிராக செயற்படும் விதத்தில் அனைத்தும் தீர்மானிக்கப்படும். எவ்வாறாயினும் இதன்போது பாட்டாளி வர்க்க இயக்கத்திற்கு பாரிய பொறுப்புகளை சுமத்துகிறது. பாரிய சவால் உள்ளது. ராஜபக்ஷாக்கள் மீண்டும் அதிகாரத்தை உறுதிப்படுத்திக்கொண்டாலும் ரணில் கும்பல் ஆட்சிக்கு வந்தாலும் முதலாளித்துவத்தின் நெருக்கடிக்கு அவர்களிடம் தீர்வு கிடையாது. ஆனால் இலங்கை அரசியலில் சக்திகளை அணித்திரட்ட வேண்டியிருப்பது. அரசாங்கத்தை மாற்றும் திசையை நோக்கியல்ல. சமூக மாற்றத்திற்கான நீண்டகால அரசியல் நோக்கத்துடனேயாகும். இது மிகவும் சிரமமான காரியம் என்பது உண்மையே. ஆனால் இன்று வரலாற்றில் மிஞ்சியிருப்பது அது மட்டுமேயாகும். ஜனநாயக நல்லாட்சியை மேலோட்டமாக பார்க்கும்போது நியாயமானதும் முதன்மையானதுமாக தெரிகின்ற முதலாளித்துவ சீர்திருத்த அரசாங்கமொன்று ஆட்சிபீடமேறுவதன் தந்ரோபாயத்துடன் இணைத்துவிடுவதற்கு முயற்சிக்கப்படும் இக்காலத்தில் அதற்கு மேலான சமூக மாற்றத்தின் அரசியலை உயர்த்திப்பிடித்து தளர்ச்சியடையாது போராடுவதற்கு பாட்டாளிவர்க்க அரசியலுக்கு முடியுமாயிருத்தல் வேண்டும. இலங்கை அரசியல் மேற்கண்டவாறு திரட்சிப்பெற்று தமது அதிகாரத்திற்காக ராஜபக்ஷ அரசாங்கம் ஜனநாயகத்தை ஒழித்து சர்வாதிகாரத்தின் திசையை நோக்கி செல்லும் வாய்ப்பு இல்லாமலும் இல்லை. தற்போது விசேட உளவுப்படையை உருவாக்குதல், விசேட அதிரடிப்படையுடன் இணைந்து கலகத்தடுப்பு பிரிவை உருவாக்குதல் பொலிசுக்கு கூடுதலான கலகத்தடுப்பு உபகரணங்களை தருவித்தல் சிவில் நடவடிக்கைகளில் இராணுவத்தை ஈடுபடுத்தல், பாடசாலை அதிபர்களுக்கு கேர்ணல் பதவி வழங்கள். போன்ற உதாரணங்கள் மூலமாக அரசாங்கம் தம்மை தயார்படுத்திக்கொண்டிருப்பது நிரூபணமாகியுள்ளது.

இந்த நிலைமைகளின் கீழ் தமது அரசியல் நோக்கத்திற்காக போராடி போராட்ட அணிகளை உருவாக்கி தந்ரோபாயத்தை தெரிவுசெய்து இடதுசாரி இயக்கம் செயற்படுமானால் முதலாளித்துவ அரசியல் போக்குகள் இரண்டிற்கும் மாற்றீடாக விரிவான வெகுஜன இயக்கத்தை கட்டியெழுப்புவதில் வெற்றிபெறுமானால் இறுதியில் வெற்றிபெறுவது மக்களேயாகும். இவை அனைத்தின் மத்தியில் ஒன்று மட்டும் தெளிவு முன்னர் கூறுவது அதிகாரத்தின் ஊற்றாக இருப்பது பாராளுமன்றமோ அல்லது நீதிமன்றமோ அல்ல மக்களேயாகும். அம்மக்களை தெளிவுபடுத்தும் அவர்களின் நம்பிக்கையை வென்றெடுக்ககூடிய அவர்களை பொது நோக்கத்திற்காக அணித்திரட்டிய வர்க்க போராட்டத்தில் அவர்களுக்கு படிப்பினைகளைப் பெறறுக்கொடுப்பதில் வெற்றிகளும் அரசியல் இயக்கமாக வெற்றிபெறும் அதனை சாதிக்க முடிவது ஜே.வி.பியால் மட்டுமேயாகும்.

# சுவீடனின் வேலையில்லா திண்டாட்டம் ஸ்டாக்ஹோல்ம் நகரம் எரிகின்றது!




சுவீடன், ஸ்டொக்ஹோம் நகரின் புறநகர்ப் பகுதியான ஹுஸ்பி (**Husby**) யில், தொடங்கிய கலவரம், தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது. உழைக்கும் வர்க்க குடியிருப்புகள் நிறைந்த அந்த புறநகர்ப் பகுதி, தலைநகரின் ஏழைகள் அதிகமாக வசிக்கும் பகுதியாகும். பெரும்பாலும் வெளிநாட்டுக் குடியேறிகளை கொண்டது. பொருளாதார நெருக்கடி, வேலையில்லாப் பிரச்சினையினால் அதிகமாகப் பாதிக்கப் பட்டவர்கள் வாழும் இடம். ஒரு வாரத்திற்கு முன்பு, அந்த இடத்தில் வாழ்ந்த வயோதிபர் ஒருவர்,போலீஸ்காரர்களின் துப்பாக்கிச்சூடு காரணமாக உயிரிழந்தார். "அந்த 69 வய்து முதியவர், கத்தி வைத்துக் கொண்டு மிரட்டியதாகவும், தற்பாதுகாப்புக்காக சுட்டதாகவும்..." போலிஸ் கூறுகின்றது. பொலிஸ் அறிக்கையில் பல உண்மைக்கு புறம்பான தகவல்கள் இருந்ததால், ஆத்திரமுற்ற இளைஞர்கள் தெருவில் இறங்கி ஆர்ப்பாட்டம் செய்தனர். அங்கு வந்த போலிஸ் படையை எதிர்த்து கற்களை வீசினார்கள். வணிக நிலையங்கள், வாகனங்கள் எரித்து நாசமாக்கப் பட்டன. பொருளாதார நெருக்கடி காரணமாக, ஐரோப்பிய நாடுகளில் வாழும் இலட்சக் கணக்கான மக்கள் வேலையிழந்து, வறுமையில் வாடுகின்றனர். இதனால், பல ஐரோப்பிய நகரங்கள் எந்த நேரமும் கலவரம் வெடிக்கக் கூடிய நேர வெடிகுண்டுகளாக காணப்படுகின்றன. சுவீடிஷ் பொலிசின் இனவெறிப் பேச்சுக்களே, ஞாயிறு இரவு ஸ்டொக்ஹோம் நகரில் இடம் பெற்ற கலவரத்திற்கு காரணம் என்று தெரிய வருகின்றது. "குரங்குகள், நீக்ரோக்கள்" போன்ற இனவெறி வசைச் சொற்களை, அங்கு கடமையில் இருந்த போலிஸ் அதிகாரிகள் பயன்படுத்தி உள்ளனர். சுவீடிஷ் பொலிஸ் அடிக்கடி இவ்வாறு நடந்து கொள்வதாகவும், ஞாயிற்றுக்கிழமை அதன் எதிரொலியாக வன்முறை வெடித்துள்ளதாகவும் தெரிய வருகின்றது. முகமூடி அணிந்த இளைஞர்களால், குறைந்தது 100 கார்கள் எரிக்கப் பட்டுள்ளன. பெரும்பாலும் சோமாலிய இளைஞர்களே கலவரத்தில் ஈடுபட்டதால், இதனை "முஸ்லிம் இளைஞர்களின் வெறியாட்டம்" என்ற அர்த்தத்தில், வலதுசாரி சுவீடிஷ் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டு வருகின்றன. இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி, சுவீடிஷ் இனவெறியர்களும் சோமாலியர், முஸ்லிம்கள், வெளிநாட்டவர்களுக்கு எதிரான கருத்துக்களை பரப்பி வருகின்றனர். கலவரம் இடம்பெற்ற ஹுஸ்பி (ர்ரளடில) என்ற புறநகர் பகுதியில் வசிக்கும் 80 சதவீதமானோர் ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளை சேர்ந்த குடியேறிகள் ஆவர். அண்மைக்கால பொருளாதார நெருக்கடி, அதனால் ஏற்பட்ட வேலையில்லாப் பிரச்சினை, வாய்ப்புகள் மறுக்கப்படும் வெளிநாட்டவர்கள், இது போன்ற சமூகப் பிரச்சனைகளை மூடி மறைப்பதற்கு, இனவாத திரிபுபடுத்தல்கள் உதவுகின்றன. "சுவீடன் போன்ற ஸ்கண்டிநேவிய நாடுகளில் இனவாதம் அறவே இல்லை" என்று பலர் அப்பாவித்தனமாக நம்பிக் கொண்டிருக்கிறார்கள். சில நாட்களுக்கு முன்னர், ஏதோ ஒரு நிறுவனம் நடத்திய புள்ளிவிபர ஆய்வு ஒன்றும் அவ்வாறு தெரிவித்திருந்தது. ஹுஸ்பி புறநகர் பகுதியில் தொடங்கிய கலவரம், தற்போது ஸ்டொக்ஹோல்ம் நகரின் பிற பகுதிகளுக்கும் பரவி வருகின்றது. வீதியோரமாக நிறுத்தி வைக்கப் பட்டிருக்கும் கார்கள் இரவோடிரவாக கொளுத்தப் படுகின்றன. பெரும்பாலும் 15 முதல் 19 வயதான இளைஞர்களே கலவரத்தில் ஈடுபடுகின்றனர். சில நேரம், 12 அல்லது 13 வயது சிறுவர்களும் காணப்படுகின்றனர். நேற்றும் பொலிஸ் நான்கு பேரை கைது செய்தது. கலவரத்தில் ஈடுபடும் இளைஞர்கள் எந்த இனத்தை சேர்ந்தவர்கள் என்பதை பெரும்பாலான ஊடகங்கள் குறிப்பிட்டு எழுதுவதை தவிர்த்து வருகின்றன. இருப்பினும் வலதுசாரி ஊடகங்கள், "சோமாலியர்கள், முஸ்லிம்கள்" என்று குறிப்பிட்டு எழுதி, "பன்முகக் கலாச்சார சமூகத்தின் எதிர்விளைவு" என்று, மூன்றாமுலக நாடுகளின் வந்தேறுகுடிகளுக்கு எதிரான காழ்ப்புணர்ச்சியை காட்டி வருகின்றன. ஹுஸ்பி புறநகர் பகுதியில், ஒரு 69 வயது முதியவரை போலீஸ்காரர்கள் சுட்டுக் கொன்றது தான், கலவரத்திற்கு மூல காரணம். போலிஸ் வன்முறைக்கு பலியான வயோதிப நபர், "ஒரு ஐரோப்பிய வெள்ளை இனத்தவர்" என்று போலிஸ் அறிவித்த தகவலை, இந்த வலதுசாரி ஊடகங்கள் மூடி மறைப்பது குறிப்பிடத் தக்கது.

வேலையில்லாதோர் எண்ணிக்கை, ஐரோப்பிய நாடுகளின் பூர்வீக வெள்ளையின மக்களிடையே குறைவாகவும், வந்தேறுகுடி சமூகங்களில் அதிகமாகவும் உள்ளது. அதற்கு அவர்களின் சோம்பேறித்தனம் மட்டுமே காரணம் என்பது, பாதிக்கப்பட்ட மக்களை குறைகூறும் அயோக்கியத்தனம் ஆகும். வந்தேறுகுடி சமூகங்களில், அதிகமாக படித்து, பட்டம் பெற்றவர்களுக்கு கூட வேலை இலகுவில் கிடைப்பதில்லை. பல்வேறு காரணங்களை கூறி தட்டிக் கழிக்கிறார்கள். நீங்கள் எவ்வளவு சரளமாக அவர்களது மொழியை பேசினாலும், மொழிப் புலமை காணாது என்று கூறுவார்கள். உங்கள் நாட்டில் இருந்து கொண்டு சென்ற சான்றிதல்களை காட்டினால், அவற்றை தகுதி போதாது என்று கூறி புறக்கணிப்பார்கள். பொதுவாகவே, தொழில் வாய்ப்புகள் குறைவாகவும், வேலை தேடுவோர் அதிகமாகவும் இருக்கும் காலங்களில், தங்களது இனத்தை சேர்ந்தவர்களுக்கு மட்டுமே வேலை கொடுப்பார்கள். இது ஏற்கனவே நிஷரூபிக்கப் பட்ட உண்மை.

நீங்கள் அனுப்பும் ஊஏ யில் இருக்கும் பெயர், பிறந்த இடம் போன்ற விபரங்களை பார்த்து விட்டே, உங்களை நேர்முகப் பரீட்சைக்கு கூப்பிட மாட்டார்கள். நீங்கள் அந்த நாட்டை சேர்ந்த பூர்வீக பிரஜை என்றால், வாய்ப்பு அதிகமாக இருக்கும். வேலையில்லா பிரச்சினை ஏற்படும் காலங்களில், வந்தேறுகுடிகள் தான் அதிகமாக பாதிக்கப் படுகின்றனர். அதனால், அவர்கள் அதிகமாக அரசின் உதவிப் பணத்தில் தங்கியிருக்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது. அது கிடைக்காவிட்டால், திருடியோ, பிச்சை எடுத்தோ தான் வாழ வேண்டி இருக்கும். அது இந்த ஐரோப்பிய நாடுகளின் இமேஜை பாதித்து விடும். அதற்குப் பிறகு, இந்தியா போன்ற மூன்றாமுலக நாடுகளிக்கும், வளர்ச்சி அடைந்த மேற்கு ஐரோப்பிய நாடுகளிக்கும் இடையில் வித்தியாசம் இல்லாது போய்விடும்.

அனேகமாக, எல்லா மேற்கு ஐரோப்பிய நாடுகளிலும், வந்தேறு குடிகளின் எண்ணிக்கை மொத்த சனத்தொகையில் ஒரு சதவீதம் கூட இல்லை. அதனால், அவர்களில் எத்தனை இலட்சம் பேர் அரச உதவிப் பணத்தில் வாழ்ந்தாலும், அதே மாதிரி வாழும் பூர்வீக வெள்ளையரின் எண்ணிக்கைக்கு ஈடாகாது. அதாவது, அரச உதவிப்பணத்தில் வாழும் பூர்வீக வெள்ளையின மக்களின் எண்ணிக்கை, வந்தேறுகுடிகளை விட பல மடங்கு அதிகம். இதனை பல புள்ளிவிபரங்கள் உறுதிப் படுத்துகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செஞ்சக்தி

மக்கள் விடுதலை முன்னணியின் உத்தியோகபூர்வ செய்தித்தாள்


464/20 பன்னிபிட்டடிவீதி பெலவத்த,பத்தரமுல்ல,இலங்கை
011-2785545, 0112785612
E-mail sensackthynews@gmail.com


## வட மாகாணசபைத் தேர்தலும் அரசாங்கத்தின் போக்கும்

வடக்கில் யுத்தம் முடிவடைந்து நான்காண்டுகள் கடந்துள்ள நிலையில், மகிநதரின் அரசாங்கத்தை மன்னிக்க முடியாத அளவிலான பாவத்தை அம்மக்கள் மீது சுமத்தியுள்ளார். நான்கு வருடங்களுக்கு பின்னர் தான்தோன்றித்தனமாகவும், எதேச்சதிகாரமாகவும் வடக்கு மக்கள் மீது அராஜகத்தை கட்டவிழ்த்துவிட்டுள்ளார். உக்கிரமடையும் பிரச்சினைகளுக்கு உருப்படியான தீர்வினை வழங்குவதில் மகிந்தரின் அரசாங்கம் தோல்விகண்டுள்ளது. அதற்குப் பதிலாக வடக்கின் மீது தனது ஆதிக்கத்தை நிலைநிறுத்துவதற்காக இராணுவ ஆட்சியை கட்டவிழ்த்துவிட்டுள்ளது. வடக்கின் காணிகள் மற்றும் வளங்களை சூரையாடுகிறது. துன்பப்படும் பொதுமக்களை பொருட்படுத்தாது கே.பிக்களை பாலூட்டி வளர்க்கிறது.

தற்போது வடக்கு தேர்தல் நடத்தப்படவுள்ளதால் அது பாரிய அச்சுறுத்தலும் சவாலாகவும் அமைந்திருக்கிறது. இந்தியாவின் அழுத்தங்களுக்கு அடிபணிந்து தூரநோக்குடன் சிந்திக்காது வடக்குத் தேர்தலை நடத்தியே தீருவதாக அரசாங்கம் இந்தியாவுக்கு உறுதியளித்துள்ளது. இப்போது அதை நடத்த முடியாத பல்வேறு சாக்கு போக்குகளையும் கூறுவது அரசாங்கமாகும். நாட்டில் ஏனைய பகுதிகளில் மாகாணசபைத் தேர்தல்களை நடத்திவிட்டு வடக்கில் தேர்தலை நடத்தாதிருப்பதென்பது பாரிய ஆபத்தான விடயமாகும். மறுபுறத்தில் பிரிவினைவாத மனநிலையை தோற்கடிக்கப்படாத நிலையில், தேசிய ஒற்றுமைக்காக ஒன்றையும் செய்யாத நிலையில் வடக்கு தேர்தல் என்பது அரசாங்கத்திற்கு பாரிய சவாலாக அமைவது தவிர்க்க முடியாது. இதில் பாரிய பிரச்சினை என்னவென்றால் மகாணசபைகள் முறைமைகள் என்பது ஒருபோதும் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வாக அமையப்போவிதில்லை.

இலங்கையில் புரையோடிப்போயுள்ள தேசியப் பிரச்சினைக்கு ஒருபோதும் மகிந்தர் அரசாங்கத்தால் தீர்க்க முடியாது. அதேபோன்று நலிவடைந்த முதலாளித்துவ அமைப்பாலும் முடியாது என்பது வரலாறு நிருபித்திருக்கிறது. ஆனால் வடக்குவாழ் தமிழ் மக்களின் அடிபப்டை பிரச்சினைகள் தீர்க்கப்படல் வேண்டும், அதாவது காணிப் பிரச்சினை, ஜனநாயகத்தை நிலைநாட்டல், கருத்துச் சுதந்திரம் போன்ற பிரச்சினைகளுக்கு தீர்வு காணவேண்டியது அரசாங்கத்தின் கட்டாய பணியாகும். அப்படியின்றி எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றுவது போன்று முட்டாள்தனமான முடிவுகளை முன்னெடுத்தால் பிரச்சினை மேலும் சிக்கலடைவது தவிர்க்க முடியாது. ஆகவே ஒரு போதும் அவ்வாறு செய்யக் கூடாது இது எரியும் பிரச்சினையென்று புரிந்துக்கொண்டு செயற்பட வேண்டும்.

இப்போது அரசாங்கம் செய்ய வேண்டியதென்ன? உக்கிரமடைந்துள்ள பிரச்சினைகளுக்கு தீர்வினை பெற்றுக்கொடுக்க வேண்டும். ஜனநாயக உரிமைகளை பெற்றுக்கொடுத்து, சமத்துவத்தின் அடிப்படையில் உரிமைகளை வழங்கி தமிழ் மக்களை இலங்கையின் பிரஜைகளாக கருதி தேசிய ஒற்றுமையின் கதவை திறக்க வேண்டும். அதேபோன்று தேசியப் பிரச்சினைக்கு ஒருபோதும் தீர்வாக அமையாத மாகாணசபைகளை நாடு முழுவதிலும் கலைத்தெரிய வேண்டும். இந்தியாவையோ இனவாதச் சக்திகளையோ திருப்பதிப்படுத்துவதற்குப் பதிலாக மக்களின் உரிமைகளை வழங்கி மக்களைத் திருப்திப்படுத்த வேண்டும். அப்படி செய்யாவிட்டால் இது இன்னொரு கவலைக்கிடமான அத்தியாயத்தின் ஆரம்பமாக அமைவது தவிர்க்க முடியாது. அவ்வாறு தோன்றப்போகும் ஆப்பத்தான நிலையை தடுப்பதற்காக நாட்டை நேசிக்கும், தேசிய ஒற்றுமையை வேண்டிநிற்கும் அனைவரதும் கடமைப் பொறுப்பாகும்.

## மக்கள் விடுதலை முனன்ணியால் நினைவு கூறப்பட்ட சர்வதேச தொழிலாளர் தினமான மேதினம்





மேதின ஊர்வல அணிவகுப்பில் ம.வி.மு தலைவர்களும் சர்வதேச அமைப்பின் தோழர்,தோழிகளும்



முன்னணிப்படையான சோஷலிஸ தொழிலாளர் சங்கம்






இல 198/19 கொழும்பு 10ல் வசிக்கும் டில்வின் சில்வா அகிய என்னால் இல 43/43 வலவத்த வீதி தெல்கந்த நுகேகொடை சரளா அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org